# Plus Two Commerce

# - Study Material

## +2 வணிகவியல்

## குறு மற்றும் சிறுவினா விடைகள்

## பாடம் 2

## மேலாண்மை செயல்பாடுகள்

Prepared by


# M.Muthu Selvam

M.Sc.,M.Com.,M.Ed.,M.Phil

PG.Asst., (Commerce)

MLWA.Hr.Sec.School

Madurai -1

Mail Id : dhakshina29@gmail.com


Mobile No : 98421 04826

# மேலாண்மை செயல்பாடுகளின் உள்ளடக்கம் யாது Managerial functions

- நேர திட்டவட்டம் நிறுவனத்தின் திட்ட வட்டம் மற்றும் நாட்டின் திட்டவட்டம் ஆகியவற்றை உள்ளடக்கியது



# மேலாண்மை செயல்பாடுகளின் வகைகள் Classification of Mangement Functions




- முதன்மை பணிகள் அல்லது முக்கிய செயல்பாடுகள்
- துணை பணிகள் அல்லது துணை செயல்பாடுகள் என இரு வகைப்படும்

# மேலாண்மை செயல்பாடுகளின் முக்கிய செயல்பாடுகளில் அடங்குவதை கூறுக


## Main Functions of functions of management

- திட்டமிடுதல்
- ஒழுங்கமைத்தல்
- பணியமர்த்துதல்
- இயக்குவித்தல்
- கட்டுப்பாடுகாத்தல்
- ஒருங்கிணைத்தல்
- செயலூக்கமளித்தல்
- ஆகியன முக்கிய செயல்பாடுகளில் அடங்குவன



# மேலாண்மை செயல்பாடுகளின் துணை செயல்பாடுகளில் அடங்குவன யாவை

## Subsidiary Functions of functions of management


MAIN AND SUBSIDIARY FUNCTIONS OF MANAGEMENT

| MAIN FUNCTIONS | SUBSIDIARY FUNCTIONS |
|---|---|
| PLANNING | COMMUNICATION |
| ORGANISING | DECISION-MAKING |
| STAFFING | INNOVATION |
| DIRECTION | |
| CO-ORDINATION | |
| MOTIVATION | |
| CONTROL | |

- புதுமைப்படுத்துதல்
- பிரதிநிதித்துவம்
- முடிவெடுத்தல்
- தகவல் தொடர்பு ஆகியவை மேலாண்மை செயல்பாடுகளில் துணை பணிகளாகும்

# திட்டமிடுதல் Planning

- திட்டமிடுதல் என்பது மேலாண்மையின் செயல்பாடுகளில் முதன்மையானது ஆகும்
- திட்டமிடுதல் என்பது முன்கூட்டியே முடிவு எடுப்பதை குறிக்கிறது
- திட்டமிடுதல் என்பது வருங்கால தேவைகளை பூர்த்தி செய்வதற்கான ஒரு ஆக்கபூர்வமான மதிப்பீடு ஆகும்



# திட்டமிடுதல் Planning




- எந்த ஒரு செயல்பாடு நடவடிக்கைகள் எடுக்கும் முன்னர் என்ன செய்யப்பட வேண்டும்? எங்கே? எப்படி? யார் அதை செய்ய வேண்டும்? என்பனவற்றை தீர்மானிப்பதன் மூலம் செயல்படுத்த வேண்டும்

# ஒழுங்கமைத்தல் Organising

- ஒரு அமைப்பின் உறுப்பினர்களுக்கு இடையில் இணக்கமான உறவை ஏற்படுத்துவதும்
- ஒரு வலைப்பின்னல் போன்ற அமைப்பை அவர்களது உறவுகளுக்கு இடையில் உருவாக்கும் செயல் முறையை ஒழுங்கமைத்தல் அல்லது ஏற்பாடு செய்தல் அல்லது ஏற்படுத்துதல் ஆகும்



# பணியமர்த்துதல் Staffing



- பொருத்தமான நபர்களை பொருத்தமான வேலைக்கு அமர்த்தும் செயலை குறிப்பதாகும்
- பணிக்குப் பொருத்தமான நபர்களை தேர்ந்தெடுப்பது தேவையான நபர்களுக்கு பயிற்சி அளிப்பது சிறந்த நபர்களுக்கு பதவி உயர்வு அளிப்பது

# பணியமர்த்துதல் Staffing

- பழைய நபர்களுக்கு ஒய்வு அளிப்பது
- அனைத்து நபர்களின் செயல்திறன்களை மதிப்பீடு செய்வது மற்றும்
- பணியாளர்களுக்கு போதுமான ஊதியம் வழங்குவது ஆகியன பணியமர்த்துதல் அடங்கியுள்ளது




# இயக்குவித்தல் Directing



- தற்போதைய இலக்குகளை சாதிக்கும் பொருட்டு தொடர்ச்சியான அடிப்படையில் செயல் ஊக்கம் அளித்தல் முன்னணியிலிருத்துதல் வழிகாட்டுதல் மற்றும் கீழ்நிலை பணியாளர்களுடன் தொடர்புபடுத்துதல் போன்றவை இயக்குதலை குறிக்கிறது

# இயக்குவித்தல் Directing

- அமைப்பின் இலக்குகளை நிறைவேற்றுவதற்கு பணியாளர்களை இயக்கும் பொருட்டு சுற்றறிக்கைகள் அறிவுறுத்தல்கள் கையேடுகள் செய்திமடல்கள் அறிவிப்பு பலகைகள் கூட்டம் பங்கேற்பு இயக்கம் ஆகியவற்றின் மூலமாக பணியாளர்களுக்கு தேவையான அனைத்து விவரங்களும் உரிய தகவல் தெரிவிக்கப்படுகிறது



# கட்டுப்பாடு காத்தல் Controlling



- ஊக்க ஊதிய உயர்வு மற்றும் பதவி உயர்வு அளிக்கும் முடிவுகளை எடுப்பதற்கும் பணியாளர்களின் செயல்திறனை மதிப்பிடுவதற்கும் கட்டுப்படுத்துதல் செயல்பாடு பயன்படுகிறது

# கட்டுப்பாடு காத்தல் Controlling

- குறைந்த செயல்திறன் உடையவர்களை அடையாளம் காண்பதற்கும் குறைதீர் பயிற்சிகளை அவர்களுக்கு வழங்குவதற்கும் கட்டுப்பாடு செயல்பாடு உதவுகிறது



# ஒருங்கிணைத்தல் Co-ordination




- ஒவ்வொரு நிர்வாக செயல்பாடுகளும் ஒருங்கிணைத்தலில் உள்ளடங்கியுள்ளது
- உதாரணமாக திட்டமிடுதல் மற்றும் ஒருங்கிணைப்பு
- ஒழுங்கமைத்தல் மற்றும் ஒருங்கிணைப்பு
- பணிக்கமர்த்துதல் மற்றும் ஒருங்கிணைப்பு

# ஒருங்கிணைத்தல் Co-ordination

- இயக்குதல் மற்றும் ஒருங்கிணைப்பு
- செயல் ஊக்கம் அளித்தல் மற்றும் ஒருங்கிணைப்பு மற்றும்
- கட்டுப்படுத்துதல் மற்றும் ஒருங்கிணைப்பு



# ஒருங்கிணைத்தல் Co-ordination



- அனைத்து செயல்களும் ஒழுங்குபடுத்தும் செயல்பாடுகளில் குழுவாகவோ அல்லது பிரிவு வாரியாக பிரிக்கப்படுகின்றன இப்போது இத்தகைய குழுவான செயல்பாடுகள் ஒரு நிறுவனத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதில் ஒருங்கிணைக்கப்படுகின்றன

# செயல் ஊக்கம் அளித்தல்
## Motivating

- ஒரு பணியை விரைவாக செய்து முடிப்பதையும்
- பணியாளர்களின் பணியின் மீதான விருப்பத்தை வளர்ப்பதையும் செயல் ஊக்கம் அளித்தல் என்ற சொல் உள்ளடக்கியுள்ளது
- செயலூக்கம் அளித்தல் ஒரு வளமிக்க தலைமையின் கீழ் செயல்பட வேண்டும்



# ஒவ்வொரு பணியிடத்திலும் பணியாளர்கள் என்னென்னவற்றை எதிர்பார்க்கின்றார்கள்



- பணிபுரிய சாதகமான பணிச்சூழல்
- நியாயமான முறையில் நடத்தப்படல்
- பணம் சார்ந்த மற்றும் பணம் சாராத ஊக்குவிப்புகள்

# ஒவ்வொரு பணியிடத்திலும் பணியாளர்கள் என்னென்னவற்றை எதிர்பார்க்கின்றார்கள்

- திறம்பட தகவல் தொடர்பு மற்றும் பண்பான அணுகுமுறை ஆகியவற்றையே பணியிடத்தில் பணியாளர்கள் எதிர்பார்க்கின்றனர்



# செயலூக்கமளித்தலின் நன்மைகள் யாவை? State the importance of Motivation.



- நிறுவனத்தின் நோக்கங்களை அடைய முடியும்
- ஒரு பணியை விரைவாக செய்து முடிக்க முடியும்
- பணியாளர்களுக்கு பணியின் மீது விருப்பத்தை வளர்க்க முடியும்


# மேலாண்மை செயல்பாடுகளில் துணை செயல்பாடுகளைப் பற்றி விளக்குக

Bring out the subsidiary functions of management.

- புதுமைப்படுத்துதல்
  **Innovation**
- வியாபார உலகில் செய்யப்படும் மாற்றங்களை எதிர்கொள்ள ஊழியர்களையும் அமைப்பையும் தயார் நிலைப்படுத்தும் செயல்பாடு புதுமைப்படுத்துதல் என்பதை குறிக்கிறது



# புதுமைப்படுத்துதல் Innovation




- வியாபாரத்தில் தொடர்ச்சியான மாற்றங்கள் செய்யப்படுகின்றன
- நுகர்வோர்கள் புதுமைப்படுத்துதல் மூலம் திருப்தி அடைகின்றனர்
- புதிய பொருளை மேம்படுத்துதல்

# புதுமைப்படுத்துதல் Innovation

- புதிய உற்பத்திகள்
- உற்பத்தியில் புதிய தொழில்நுட்பங்கள்
- புதிய வடிவமைப்பிலான தயாரிப்பு மற்றும் செலவு குறைப்பு போன்றவற்றை புதுமைப்படுத்துதல் உள்ளடக்கியுள்ளது



# பிரதிநிதித்துவம் Representation

- ஒரு மேலாளர் ஒரு நிறுவனத்தின் பிரதிநிதியாக செயல்படவேண்டும்
- வாடிக்கையாளர்கள் பொருட்கள் மற்றும் சேவையை அளிப்பவர்கள் அரசாங்க அதிகாரிகள் வங்கிகள் நிதி நிறுவனங்கள் தொழிற்சங்கங்கள் மற்றும் இதை போன்றவர்களுடன் மேலாளர் தொடர்புடன் இருக்க வேண்டும்



# பிரதிநிதித்துவம் Representation

- மற்றவர்களுடன் நல்ல உறவு வைத்திருக்க வேண்டியது ஒவ்வொரு மேலாளரின் கடமையாகும்



# முடிவெடுத்தல்
# Decision-making



- ஒரு அமைப்பின் ஒவ்வொரு பணியாளரும் பல்வேறு எண்ணிக்கையிலான முடிவுகளை ஒவ்வொரு நாளும் எடுக்கின்றனர்
- ஒரு அமைப்பு இலகுவாக செயல்படுவதற்கு முடிவெடுத்தல் உதவுகிறது

# முடிவெடுத்தல் முக்கியம் என்று நீங்கள் ஏன் நினைக்கிறீர்கள்




- ஒரு அமைப்பின் ஒவ்வொரு பணியாளரும் பல்வேறு எண்ணிக்கையிலான முடிவுகளை ஒவ்வொரு நாளும் எடுக்கின்றனர்
- ஒரு அமைப்பு இலகுவாக செயல்படுவதற்கு முடிவெடுத்தல் உதவுகிறது
- எனவே முடிவெடுத்தல் முக்கியம் என்று நான் நினைக்கிறேன்

# தகவல் தொடர்பு / தொடர்புபடுத்துதல் செயல்பாட்டின் பங்கு
## Communication

- தொடர்பு என்பது மனித எண்ணங்களை கண்ணோட்டங்களை அல்லது கருத்துக்களை ஒரு நபர் மற்றொரு நபருக்கு பரிமாற்றம் செய்வதை குறிக்கின்றது



# தகவல் தொடர்பு / தொடர்புபடுத்துதல் செயல்பாட்டின் பங்கு

## Communication



- என்ன வேலை வேண்டும் செய்யப்பட வேண்டும்? அது எங்கே செய்யப்பட வேண்டும்? அது எவ்வாறு செய்யப்பட வேண்டும்? அது எப்போது செய்யப்பட வேண்டும்? என்பது பற்றி தொழிலாளர்களுக்கு தெரிவிக்கப்படவேண்டும்

# தகவல் தொடர்பு / தொடர்புபடுத்துதல் செயல்பாட்டின் பங்கு Communication

- வேலையை ஒழுங்குபடுத்துவதற்கும் நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்துவதற்கும் தொடர்பு உதவுகிறது



# பணியாளர்களை யாரால் கட்டுப்படுத்த முடியும்



- பணியாளர்களை அந்நிறுவனத்தின் மேலாளர் மட்டுமே கட்டுப்படுத்த முடியும்
- சிறந்த மேலாளர் பணியாளர்களை தனது கட்டுப்பாட்டில் வைத்து இருப்பார்

இது போன்ற பதிவுகளை
பதிவிறக்கம் செய்ய
எனது website
www.maduraicommerce.com
காணவும்

Thank you ….


# M.Muthu Selvam

M.Sc.,M.Com.,M.Ed.,M.Phil

PG.Asst., (Commerce)

MLWA.Hr.Sec.School

Madurai -1

Mail Id : dhakshina29@gmail.com

Mobile No : 98421 04826